# GKR'S INSTITUTE

- DAILY CURRENT AFFAIRS
- WEEKLY CURRENT AFFAIRS
- MONTHLY MAGAZINE
- ONE LINER FOR CURRENT AFFAIRS
- TOPICWISE QUESTION
- MONTHLY QUESTION AND ANSWER

**04.10.2022**

**WEBSITE LINK** : https://gkrsinstitute.com/

**Telegram Link** : https://t.me/gkrsInstitute

**FACEBOOK LINK** : https://www.facebook.com/தமிழில்-பயில்வோம்-UPSC-102987411064022/

## முக்கிய தினங்கள்

1. 04.10.2022

- ❖ **உலக விலங்கு நாள் (World Animal Day)** ஆண்டு தோறும் அக்டோபர் 4 அன்று கொண்டாடப்பட்டு வருகிறது.
- ❖ கொடி காத்த குமரன் பிறந்த நாள்.
- ❖ இயற்கை ஆர்வலரும் விலங்குகளின் தெய்வமாக மதிக்கப்படுபவருமான **பிரான்சிஸ் அசிசி** என்பவரின் வணக்க நிகழ்வு அக்டோபர் 4 இல் வருவதால் இந்நாள் வன விலங்கு நாளாக கொண்டாடப்பட்டு வருகிறது.

## மத்திய செய்திகள்

1. விமானப்படையில் உள்நாட்டு ஹெலிகாப்டர்கள்

- ❖ உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட நான்கு இலகு ரக தாக்குதல் ஹெலிகாப்டர்களை விமானப்படையில் இணைக்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.
- ❖ **பாகிஸ்தானுடனான 1999 கார்கில் போருக்கு** பிறகு ஏற்பட்ட தேவை காரணமாக இலகுரக ஹெலிகாப்டர்களை உள்நாட்டிலேயே தயாரிக்க மத்திய அரசு முடிவெடுத்தது.
- ❖ அதனை அடுத்து **ஹிந்துஸ்தான் ஏரோநாட்டிக்ஸ் நிறுவனம்** ( ஹெச்ஏஎல்) இந்த ஹெலிகாப்டர்களை தயாரித்துள்ளது.
- ❖ ஒவ்வொன்றும் **5.8 டன்** கொண்ட இந்த ஹெலிகாப்டர்கள் வானில் உள்ள இலக்குகளை தாக்கி அழிக்கும் வல்லமை கொண்டவை.
- ❖ இந்த இலகு ரக ஹெலிகாப்டர்களுக்கு **'பிரசண்ட்'** என அமைச்சர் ராஜ்நாத் சிங் பெயரிட்டார்.
- ❖ ஹெச்ஏஎல் நிறுவனத்திடம் இருந்து இவ்வகையைச் சேர்ந்த 10 ஹெலிகாப்டர்களை வாங்குவதற்கு இந்திய விமானப்படை ஒப்பந்தம் மேற்கொண்டுள்ளது.
- ❖ தற்போது முதல் கட்டமாக நான்கு ஹெலிகாப்டர்கள் படையில் இணைக்கப்பட்டுள்ளன.

2. ஸ்வீடன் விஞ்ஞானிக்கு நோபல் பரிசு

- ❖ மனித சமூகத்தின் பரிணாமம் தொடர்பான ஆராய்ச்சிக்காக **ஸ்வீடன் விஞ்ஞானி ஸ்வான்டே பாபோவுக்கு** நோபல் பரிசு அறிவிக்கப்பட்டுள்ளது.
- ❖ நடப்பாண்டு மருத்துவத்துக்கான நோபல் பரிசு தொடர்பான அறிவிப்பை தேர்வு குழு செயலாளர் **தாமஸ் பெர்ல்மான்** ஸ்வீடனின் ஸ்டாக் ஹோம் நகரில் அறிவித்தார்.
- ❖ மனிதர்களின் பரிணாமம் தொடர்பாக ஆய்வுகளை மேற்கொண்டதற்காக ஸ்வீடன் விஞ்ஞானியான ஸ்வாண்டே பாபோவுக்கு நோபல் பரிசு வழங்கப்பட உள்ளதாக அவர் தெரிவித்தார்.
- ❖ மனிதர்களின் பரிணாமம் குறித்து தீவிர ஆய்வுகளை மேற்கொண்ட பாபோ,

நவீன மனிதர்களின் மரபணுக்களின் தொகுதியை **(ஜீனோம்),** மனிதர்களின் முந்தைய பரிணாமமான நியாண்டர்தால், டெனிசோவன் ஆகியவற்றின் மரபணு தொகுதிகளுடன் ஒப்பிட்டு பல்வேறு ஆராய்ச்சிகளை மேற்கொண்டார்.

- **நியாண்டர்தால், டெனிசோவன்** ஆகிய இனக்குழுக்கள் இணைந்தே மனித இனம் உருவானதாக தனது ஆய்வின் மூலமாக அவர் கண்டறிந்து தெரிவித்தார்.
- முந்தைய இன குழுக்களில் இருந்து மனிதர்களின் இனக்குழு தனித்துவமானது என்ற அவரின் கண்டுபிடிப்பால் **மனிதர்களின் நோய் எதிர்ப்பு மண்டலம்** குறித்து அதிக தகவல்கள் தெரிய வந்ததாக நோபல் தேர்வு குழு தெரிவித்துள்ளது.
- குழுவினரின் கண்டுபிடிப்பானது **கரோனா உள்ளிட்ட நோய் தொற்றுகளுக்கு எதிராக மனிதர்களின் மரபணு எவ்வாறு செயல்படுகிறது** என்பதை அறிந்து கொள்ள உதவியதாக குழு தெரிவித்தது.

### 3. பிரதம மந்திரி வீடு கட்டும் திட்டம்: ரூபாய் 912 கோடி ஒதுக்கீடு

- பிரதம மந்திரியின் வீடு கட்டும் திட்டத்துக்காக ரூபாய் 912 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
- மத்திய அரசு சார்பில் **ரூபாய் 547 கோடியும்** மாநில அரசின் பங்காக ரூபாய் 365 கோடியும் ரூபாயும் ஒதுக்கப்பட்டுள்ளதாக அரசாணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.
- நாடு முழுவதும் குடிசைகளை அகற்றிவிட்டு அனைவருக்கும் கான்கிரீட் வீடுகள் கட்டிக் கொடுக்கும் வகையில் **பிரதம மந்திரி வீடு கட்டும் திட்டம் 2015** ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது.
- இந்த திட்டத்தின் கீழ் தகுதியான பயனாளிகளை தேர்வு செய்து கான்கிரீட் வீடுகள் கட்டுவதற்காக மத்திய மாநில அரசுகள் சார்பில் நிதி ஒதுக்கப்படுகிறது.
- பிரதம மந்திரி வீடு கட்டும் திட்டத்தின் கீழ் விண்ணப்பிக்கும் பயனாளிகளுக்கு வீடு கட்டுவதற்காக ஒவ்வொரு வீட்டுக்கும் தலா **₹2.75 லட்சம்** மானியம் வழங்கப்படுகிறது.
- மத்திய அரசு **அறுபது சதவீதம்** நிதியை ஒதுக்கும் நிலையில் மீதமுள்ள **40 சதவீதத்தை** மாநில அரசு வழங்கி வருகிறது.